விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 221 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 12 வியாழக்கிழமை (28.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829





## அவசரகாலச் சட்டம்
### 57 மேலதிக வாக்குகளால் சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் யோசனை பாராளுமன்றில் 57 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. 11

## மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் அரசுக்கு அமெரிக்கா ஒத்துழைக்கும்
### ஒரு கிழமைக்குள் 2ஆவது முறையாக ரணிலை சந்தித்த அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு



(கொழும்பு)

மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து, மக்களின் அபிலாஷைகளுக்கு செவிசாய்க்கும் நல்லாட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஒத்துழைப்புக்களை வழங்கும் 11

## அரச பயங்கரவாதத்தில் ஈடுபட்டவர்களோடு பாராளுமன்றில் ஒன்றாக அமரேன் - சஜித்

(கொழும்பு)

"காலிமுகத்திடலில் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தி, அராஜகம் புரிந்தவர்களுடன் ஒன்றாக அமருவதற்கு நாங்கள் தயாரில்லை. ஆட்சியமைக்க நாங்கள் வருவோம் என்று அவர்கள் நம்பிக்கை வைப்பது முட்டாள்த்தனமானது"

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார். கடந்த கால சம்பவங்களைப் புறந்தள்ளி அவருடன் இணைந்து செயற்பட நாம் தயாராக இருந்தோம்.

ஆனால், கடந்த 21ஆம் திகதி நள்ளிரவு 11

## கொரோனா
### +4 மரணம்
### +154 தொற்று

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 4 பேர் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளனர். 11

### மன ரீதியான அழுத்தத்தை
## கோட்டாபயவுக்கு அமெரிக்க தூதுவர் கொடுத்தார்
### சபையில் விமல் வீரவன்ச

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாரத்துக்கு மூன்று தடவைகள் அமெரிக்கத் தூதுவரை சந்தித்து வந்ததாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், இலங்கையில் இன்று மன ரீதியான அழுத்தம் கொடுத்து விடயம் சாதிக்கப்படுகின்றன என்று குறிப்பிட்டார்.

அந்த வகையிலேயே இராணுவத்திடம் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல்களை நடத்த வேண்டாம் என்று கோரப்படுகிறது.

இந்தநிலையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், மனோ ரீதியான அழுத் 11

# தமிழர் பிரச்சினைக்கு தீர்வு அவசியம்
### புலம்பெயர் தமிழர்களுடன் பேசத் தயார்
### சபையில் நீதி அமைச்சர் விஜயதாஸ

(கொழும்பு)

தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண்பது மிகவும் அவசியம். புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுடனும் பேசத் தயார் என நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

### புதிய சர்வகட்சி அரசாங்கத்தில்
## ராஜபக்ஷக்கள் இருக்கக் கூடாது; பெரமுனவின் ஆதிக்கமும் கூடாது
### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



(கொழும்பு)

"புதிதாக அமையவுள்ள சர்வகட்சி அரசின் அமைச்சரவையில் ராஜபக்ஷக்கள் எவரும் அங்கம் வகிக்கக்கூடாது. அவர்களுடைய ஸ்ரீலங்கா பொதுஜன முன் 11

## வாள்வெட்டுத் தாக்குதல் இளம் குடும்பஸ்தர் பலி
### முள்ளியவளையில் சம்பவம்

(முல்லைத்தீவு )

முள்ளியவளைப்பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு முள்ளியவளை தெற்கு பகுதியில் நேற்று முன்தினம் இரவு இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற வாய்த்தர்க் 11

## ஹெரோயின் பயன்படுத்திய 23 வயது இளைஞன் மரணம்
### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஹெரோயின் போதைப் பொருளை ஊசிமூலம் எடுத்துக் கொண்ட இளைஞன் இருதயத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியை சேர்ந்த 23 வயதுடைய இளைஞனே இவ்வாறு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார். 11

### தீவிரவாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது
## ஜனநாயக போராட்டங்களுக்கு செவிசாய்க்க அரசாங்கம் தயார்
### பிரதமர் தினேஷ் குணவர்தன



(கொழும்பு)

ஜனநாயக போராட்டங்களுக்கு செவிசாய்க்க அரசாங்கம் எப்போதும் தயாராக இருந்தாலும் தீவிரவாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனத் தூதுவருடன் அலி சப்ரி சந்திப்பு



(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து ஆராய்வதற்காக சீனத் தூதுவர் அலி சப்ரியை சந்தித்தார்

இலங்கைக்கான சீனத் தூதுவர் Qi Zhenhong வெளியுறவு அமைச்சர் அலி சப்ரியை நேற்று சந்தித்தார்.

இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் இலங்கை சீன நட்புறவு மற்றும் பரஸ்பர ஆர்வமுள்ள பிற தலைப்புகள் குறித்து இரு தரப்பினரும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர். (ம-7)

# போதைப்பொருளின் கூடாரமாக மாறியது காலி முகத்திடல்

(கொழும்பு)

காலி முகத்திடல் போராட்டக்களம் தற்போது போதைப் பொருள் அடிமைகளின் கூடாரமாக மாறியுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "கோட்டா கோ ஹோம்" அதாவது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகிச் செல்லுமாறு கோரியே காலி முகத்திடலில் ஆரம்பத்தில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கோட்டாபயவை வீட்டுக்கு அனுப்புவதே அவர்களின் நோக்கமாக இருந்தது என்றார். (ம-7)

# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா கோவிந்தம்மா



பிறப்பு 09.04.1944 — இறப்பு 27.07.2022

ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா கோவிந்தம்மா நேற்று (27.07.2022) புதன்கிழமை காலை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுச்சாமி - கண்மணி தம்பதிகளின் அன்பு நிறைந்த புதல்வியும் வேலுப்பிள்ளை கந்தையாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும் யோகநாதன், யோகேஸ்வரி, நாகநாதன், ஜெகநாதன் (சிவம்), தமயந்தி (ஆசிரியை - யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), சிவநாதன் (கண்ணன்), சாரங்கன் ஆகியோரின் அன்புமிக்க தாயாரும் நிர்மலலோஜினி (தேவி), ரஞ்சித், றீட்டா, கருணா, ரவிச்சந்திரன், மேரி (சுகந்தி - ஆசிரியை - யா/கோண்டாவில் இராமகிருஸ்ணா வித்தியாசாலை), மணிமேகலை (சுஜா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுமன் தர்ஷிகா, தர்ஷிகன், ரஜீவன் லக்ஷிகா (கனடா), திலக்ஷனா, றஜித்தா, பிரசாந்த், விதுஷன், அபிநயா, அமிர்தபாஷினி, காயத்திரி, துவிகாசன், வானவிகா ஆகியோரின் செல்லப் பேர்த்தியும் ஸேஹுஜா, அக்ஷரா, கர்ணீஸ் (கனடா) ஆகியோரின் அன்புமிக்க பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.07.2022) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரேசன் றோட்,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (12276)

*தகவல்:* குடும்பத்தினர்
077 666 0572
(யோகநாதன் - மகன்)

# 25 வது ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சின்னப்பு கனகரத்தினம் (கனகராசா)



தோற்றம் 18.12.1952 — மறைவு 03.08.1997

எங்கள் அன்புத் தெய்வமே
25 ஆண்டுகள் பறந்தோடி விட்டதப்பா!
இன்னமும் உங்கள் அழகிய திருமுகம்
மறையவில்லை அப்பா!
உங்கள் அமைதியான வார்த்தையும்
அன்பான செயலும் எங்கள் கண்முன்னே
நிழலாடுகின்றது அப்பா!
காலங்கள் பறந்தோடினாலும் உங்கள்
அன்பும் பாசமும் பறந்தோடவில்லையே அப்பா!

என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்:-
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
[illegible]திவேல் அழகன் (மரக்காலை உரிமையாளர்)

கண்டுவில் ஒழுங்கை,
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார நெருக்கடி காரணமாக

# கொரோனா மரணங்களை தடுக்க முடியாது போகும்

(கொழும்பு)

**பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்தால், கொரோனா மரணங்களை தடுக்க முடியாது போகும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.**

எனவே, கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக அனைத்து சுகாதாரப் பழக்கவழக்கங்களையும் பின்பற்றுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது, இலங்கையில் உள்ள 365 சுகாதார மருத்துவ அதிகாரிகள் அலுவலகங்களிலும் அன்டிஜன் பரிசோதனைக்கு தேவையான வசதிகள் இல்லை.

மேலும், பல இடங்களில் பி.சி.ஆர். சோதனைகளை நடத்துவதற்கு தேவையான பொருட்கள் இல்லை.

எனவே, நோயாளிகளின் எண்ணிக்கை கண்டறியப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையை விட ஐந்து மடங்கு அதிகமாக இருக்கலாம் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், தற்போதைய பொருளாதார நெருக்கடியால் நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவது அதிகரித்தால், இறப்பு எண்ணிக்கை வெகுவாக அதிகரிக்க கூடும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எரிபொருள் நெருக்கடியால் இதைக் கட்டுப்படுத்துவது கடினமாக இருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

கோட்டாவின்

# பயண அனுமதிக் காலத்தை நீடித்தது சிங்கப்பூர்

(சிங்கப்பூர்)

இரண்டு வாரங்களுக்கு முன்பு தனிப்பட்ட பயணமாக சிங்கப்பூர் சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பயண அனுமதி, மேலும் 14 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.



ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பன மக்களால் முற்றுகையிடப்பட்டதை அடுத்து கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவுக்கு தப்பி ஓடியிருந்தார்.

ஜூலை 14 ஆம் திகதி, மாலைதீவில் இருந்து சவுதி விமானத்தில் சாங்கி விமான நிலையத்திற்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 14 நாள் பயண அனுமதி வழங்கப்பட்டது.

சிங்கப்பூர் வந்த சிறிது நேரத்திலேயே, அவர் தனது பதவியை இராஜினாமா செய்த நிலையில் 15 ஆம் திகதி அன்று பாராளுமன்றத்தால் உத்தியோகபூர்வமாகவும் அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட புதிய விசா அடுத்த மாதம் 11ஆம் திகதியுடன் காலாவதியாகும் என சிங்கப்பூர் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையிலிருந்து சிங்கப்பூருக்குள் நுழையும் பயணிகளுக்கு பொதுவாக 30 நாட்களுக்கு பயண அனுமதி வழங்கப்படும் என சிங்கப்பூர் ஐ.சி.ஏ. ஆணைக்குழு விளக்கமளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# டலஸ், விமல், வாசுதேவ விரைவில் புதிய கூட்டணி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்டவர்களைக் கொண்ட எதிர்க்கட்சியினர் புதிய கூட்டணியை விரைவில் அமைக்கவுள்ளனர்.

இந்தத் தகவலை முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தற்போதைய அரசுடன் நாம் இணைந்து செயற்படப் போவதில்லை. அரசின் சில பதவிகளுக்காக எதிர்க்கட்சியில் சிலருக்கு அழைப்புக் கிடைத்துள்ளது. எவ்வாறெனினும் எமது தரப்பினருக்கு அதற்கான அழைப்பு எதுவும் கிடைக்கவில்லை.

அவ்வாறு அழைப்புக் கிடைத்தாலும் அரசின் எந்தவொரு பதவியையும் பொறுப்பேற்கப் போவதில்லை.

ஆளும் கட்சிக் கூட்டத்துக்குச் சமூகமளிக்கவில்லையா? எனச் சிலர் எம்மிடம் கேள்வி எழுப்புகின்றனர்.

நாம் எதிர்க்கட்சியிலேயே உள்ளதால் ஆளும் கட்சிக் கூட்டத்துக்குச் சமூகமளிப்பது எப்படி? நாம் ஆளும் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்கமாட்டோம்" என அவர் தெரிவித்தார். (நி)

# அதிக விலைக்கு எரிபொருள் விற்பவர்களை கைது செய்யும் பொலிஸாருக்கு பணப்பரிசு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் எரிபொருளினை சேகரித்து அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களை கைது செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு 50 ஆயிரம் முதல் 3 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான பணப்பரிசு வழங்கப்படவுள்ளது என பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன தகவல் வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய 100 லீற்றர் வரையான பெற்றோல் அல்லது டீசலை கைப்பற்றும் அதிகாரிகளுக்கு 50 ஆயிரம் ரூபாவும், 100 முதல் 500 லீற்றர் வரையிலான எரிபொருளை கைப்பற்றும் அதிகாரிகளுக்கு 2 இலட்சம் ரூபாவும் 500 முதல் 1000 லீற்றர் வரையான எரிபொருளைக் கைப்பற்றுவோருக்கு 3 இலட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

அதிகரித்து வரும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நாடளாவிய ரீதியில் அதிகரித்து வரும் எரிபொருளின் தேவையைப் பயன்படுத்தி சிலர் சட்டவிரோத எரிபொருள் சேகரிப்பு மற்றும் அதிக விலைக்கு விற்பனை செய்வதால் நுகர்வோர் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த நிலையில் இதனை தடுக்கும் வகையிலேயே குறித்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். (நி)

# எரிபொருள் அனுமதிச்சீட்டிற்காக சுமார் 4 மில்.வாகனங்கள் பதிவு

## எரிசக்தி அமைச்சு தகவல்

(கொழும்பு)

4 மில்லியனுக்கும் அதிகமான பயனர்கள் தேசிய எரிபொருள் அனுமதிச் சீட்டுக்காக பதிவு செய்துள்ளதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மொத்தம் 7.5 மில்லியன் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும் நேற்று முன்தின நிலவரப்படி 4 மில்லியனுக்கும் அதிகமான வாகனங்கள் மட்டுமே தேசிய எரிபொருள் அனுமதிச் சீட்டுக்காக பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார். (நி)



# பாராளுமன்ற உறுப்பினராக வஜிர சத்தியப்பிரமாணம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன நேற்று பாராளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார்.

கடந்த வாரம் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதை அடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனம் வெற்றிடமாகியது.

இந்நிலையில் குறித்த தேசியப்பட்டியல் ஆசனத்திற்காக நியமிக்கப்பட்ட வஜிர அபேவர்தன, நேற்று பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டார். (நி)

# வெளிநாடு செல்ல முற்பட்ட எழுவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக வெளிநாடுகளுக்கு செல்ல முற்பட்ட 7 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வென்னப்புவ - நைனாமடம் பகுதியில் வைத்து நேற்று அதி காலை இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களில் மூன்று சிறுவர்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, ஜா-எல மற்றும் மினுவாங்கொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் பிரிவு III-2022 பிரிவு D யில் விக்ரோறியன்ஸ் முதலிடம்



இலங்கை கிரிக்கெட் நெறிப்படுத்தலில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரின் 15 ஆவது தகுதிகாண் போட்டியில் விக்ரோறியன்ஸ் அணி, விக்ரோறி அணியை 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தமது 2 ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

விக்ரோறியன்ஸ் அணி ஏற்கனவே அரியாலை சென்றல் அணியை 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது. ஆகவே விக்ரோறியன்ஸ் அணி பிரிவு D யில் 1 ஆம் இடத்தை (WINNERS) கைப் பற்றியுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற விக்ரோறி அணி முதலில் துடுப்பெடுத்தாடியபோது 45.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றது.

அஜநாத் ஆட்டமிழக்காது 39, ஐங்கரன் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விக்ரோறியன்ஸ் அணி சார்பாக பிரியங்கன் 10 ஓவர்களில் 43 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், விஜியகுமார் 6 ஓவர்களில் 21 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கிரிஷாந் 8.4 ஓவர்களில் 39 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக் களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விக்ரோறியன்ஸ் அணி 42 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களை பெற்றுள்ளது.

பிரியங்கன்-56, கிரிசாந் ஆட்டமிழக்காது 34, பிரதீஸ்-25, கிரிஷாந்-23 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விக்ரோறி அணி சார்பாக கஜாநாத் 10 ஓவர்களில் 60 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், சிந்துஜன் 9 ஓவர்களில் 43 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப் போட்டியில் வெற்றி பெற்ற விக்ரோறியன்ஸ் அணி பிரிவு A யின் 2 ஆம் இடத்தை கைப்பற்றியவர்களுடன் 4 ஆவது கால் இறுதி முன் போட்டியில் (PRE. QUARTER FINALS 4) கலந்து கொள்வார்கள்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வுக்கு (RAN JEING) விக்ரோறியன்ஸ் அணி 8.32 புள்ளிகளையும், விக்டோறி அணி 2.46 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (4)

# வலைப்பந்தாட்டத்திற்கான வீராங்கனைகள் தெரிவு

இலங்கை வலைப்பந் தாட்ட சங்கத்தினால் வலைப்பந்தாட்டத் தில் ஆர்வமுள்ள 23 வயதுக்கு குறைவான 5.8 அடி உயரத்திற்கு சமனான அல்லது அவ் உயரத்தினை விட அதிக உயரத்தினை கொண்ட வீராங்கனைகளினை, தேசிய மட்ட பேற்றுக்கு எய்யும் குழுவிற்கு (National Level Shooters Pool) தேர்வு செய்ய இருப்பதனால் யாழ். மாவட்டத்தில் குறிப்பிடப்பட்ட உயரத்திற்கேற்ப வலைப்பந்தாட்டத்தில் ஆர்வமுள்ள வீராங்கனைகள் 077 798 9550, 077 614 0624 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து நாளை வெள்ளிக்கிழமை 29 ஆம் திகதிக்கு முன்பாக யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்க தலைவர்/செயலாளரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 6 அடி உயரமாக இருப்பின் வயதுக் கட்டுப்பாடுகள் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-90)

## கொமன்வெல்த் கூடைப்பந்து போட்டிக்கு
# யாழில் இருந்து வீரர்





கொமன்வெல்த் கூடைப் பந்து போட்டிகளில் கலந்து கொள்வதற்காக வடமாகாணத்தில் இருந்து முதன் முறையாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகநாதன் சிம்ரோன் என்ற 22 வயதுடைய இளைஞர் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறுவயதில் இருந்து கூடைப்பந்து விளையாட்டில் ஆர்வமுடைய இந்த இளைஞர் பல்வேறுபட்ட போட்டிகளில் கலந்து கொண்டுள்ளதுடன் இலங்கையில் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணியின் பிரதித் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். (4-33)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2673

Search for people, places and things

### அக்ஷயா

கசப்பான உண்மை

இரண்டு பையன்கள்
இரண்டு கதைகள்
உயிரோடு ஒன்று
உயிரில்லாமல்
மற்றொன்று
உயிரில்லாததற்கோ
உடை
உயிருள்ளவனுக்கோ
உடையில்லை என்ன
உலகமடா இது



### ஹர்சன்

நீ எந்த விலை கைபேசி
வைத்திருக்கிறாய்
என்பதில் பெருமையல்ல
நீ எந்த
கைபேசியிலிருந்து
அழைத்தாலும் எடுத்து
பேசும் உறவுகளை
சம்பாதிப்பதே பெருமை

### நவீஸ்

கடைசியா ஏன் ரசம் சாப்பிடுறாங்கன்னு
இன்னிக்குத்தான் கண்டுபிடிச்சன்...



தட்டு கழுவ ஈசியா இருக்கு அதுக்குத்தான்!

### துவாரகா

அது பிடிக்காது
இது பிடிக்காது என்று
அம்மாவிடம் சண்டை
போட்டவர்கள்
இன்று வெளிநாடுகளில்
மனதிற்கு பிடிக்காத
உணவை கட்டாயமாக
சாப்பிடுகிறார்கள்

### அபி

கடலுக்குள்ளே
மீனும் மௌனமாக
நிம்மதியாக வாழ்கிறது.
பூமிக்கு மேலே மனிதம்
இரைச்சலுடன் அமைதி
இன்றி அழிகின்றது.
*****

### வேனு

திருட தைரியம்
இல்லாதவர்கள்
பிச்சை எடுக்கிறார்கள்...
பிச்சை எடுக்க
வெட்கப்படுபவர்கள்
திருடி விடுகிறார்கள்...
இவ்விரண்டையும்
சேர்த்தே செய்ய
விரும்புகிறவர்கள்
லஞ்சம்
வாங்குகிறார்கள்...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்திற்கு எதிராக யாழ்.பல்கலையில் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கவனயீர்ப்புப் போராட்டமொன்று இடம்பெற்றது. யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஒன்றுகூடிய பல்கலைக்கழக ஆசிரியர் சங்கப்பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களுடைய போராட்டத்திற்கு மதிப்பளி, நாட்டை கொள்ளை அடிக்காதே, ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே, காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி வழங்கு போன்ற கோஷங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தி போராட்டத்தை முன்னெடுத்தனர்.(4-33)

# அத்தியாவசியப் பொருட்களை ரயில் மூலம் எடுத்துவர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

எரிபொருளை பெற்றுக்கொள்வதில் நெருக்கடி நிலைமை காணப்படுவதால் யாழ்.மாவட்டத்திற்குத் தேவையான மருந்து மற்றும் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை கொழும்பில் இருந்து புகையிரதம் மூலம் எடுத்து வருவதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்ட வர்த்தகர்கள் கடந்த மாதம் என்னைச் சந்தித்து மாவட்டத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை எடுத்து வரவும் அதே சமயம் யாழ்.மாவட்ட உற்பத்திகளை கொழும்பிற்கு அனுப்பி வைக்கவும் 10 தொடக்கம் 12 புகையிரதங்களை சேவைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு என்னிடம் கோரியிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து கடந்த 30 ஆம் திகதி அன்று இவ்விடயம் தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் எழுத்து மூலமாக தெரிவித்திருந்தேன்.

அதன் பயனாக குறித்த அத்தியாவசிய புகையிரத சேவைக்கான திட்ட முன்மொழிவினை சமர்ப்பிக்குமாறு இலங்கை புகையிரதத் திணைக்களத்திடம் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கோரியுள்ளது.

குறித்த புகையிரத சேவையை துரிதமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.தவறும் பட்சதில் அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் யாழ். மாவட்ட மக்கள் வெகுவாக சிரமப்படுவார்கள் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (4-30)



வெலிக்கடைச் சிறைப் படுகொலையின் 39 ஆவது ஆண்டு நினைவு தினமான தமிழ்த் தேசிய வீரர்கள் தினம் மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை காலை நினைவு கூரப்பட்டது. (படம்: ஜோசப்நயன்)


# கண்ணீர் அஞ்சலி

## திருமதி. கோவிந்தம்மா கந்தையா



எமது பாடசாலையின்
ஆசிரியை தமயந்தி
ரவிச்சந்திரன் அவர்களின்
பாசமிகு தாயார்
திருமதி. கோவிந்தம்மா
கந்தையா
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு
ஆத்மா சாந்தியடைய
இறைவனை
பிராத்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.


# போராட்டத்தில் ஈடுபட்டவர் கைதாகி பின் விடுதலை

(முறிகண்டி)

எரிபொருள் கோரி வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பரந்தன் சந்தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன் தினம் இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்தினடிப்படையில் வரிசையில் காத்திருந்த மக்களே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது, அப்பகுதிக்கு வருகை தந்த பொலிஸார் ஒருவரை கைது செய்து வாகனத்தில் ஏற்றினர்.


இந்த நிலையில், பொது மக்கள் பொலிஸாரிடம் வேண்டுகை விடுத்த தற்கமைவாக குறித்த நபரை விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்தனர்.குறித்த மக்களிற்கு தொடர் இலக்கம் வழங்கப்பட்டு, எரி பொருள் வந்ததும் வழங்கப்படும் என தெரி [illegible] றனர். (4-100)

# இன்று ஆடிஅமாவாசை விரதம்

தமிழ் மாதம் வரும் ஆடி மாதத்தில் கடக இராசியில் சஞ்சரிக்கும் சூரியன் சந்தி ரன், பூமி ஆகிய கிரகங்க ளுடன் ஒரே நேர்கோட்டுப் பாதையில் சூரியனுக்கும் பூமிக்கும் இடையே சந்தி ரன் அமையும் தினமே ஆடி அமாவாசை திதியாக அனுஷ் டிக்கப் பெறுகின்றது. அமாவாசை தினம் பிதிர்க் கடன் செய்வதால் மூதாதையர், ரிஷிகள், தேவர்களின் ஆசி கிடைக்கின்றது என்பது ஐதீகம்.

நமது முன்னோர்களில் ஒருவர் இறந்த திதி, பட்சம், தமிழ்மாதம் அறிந்து, ஒவ் வொரு தமிழ் வருடமும் அதே திதியன்று (ஆங்கிலத் திகதி க்கு ஒவ்வொரு ஆண்டும் மாறிவரும்) குடும்பத்தார்கள் "பிண்டம்" செய்து வைத்து படைப்பதே சிரார்த்தமாகும். இதனால் குடும்பத்தில் சகல தோஷங்களும் நிவர்த்தியாகின்றன.

# இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்படவிருந்த மாத்திரைகள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு கடத்த இருந்த வலி நிவாரண மாத்திரைகளை தமிழக க்யூ பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம் திரேஸ்புரம் கடற்கரையில் இருந்து இலங்கைக்கு வலி நிவாரண மாத்திரைகள் கடத்தப்படவுள்ளதாக க்யூ பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து க்யூ பிரிவு பொலிஸார் திரேஸ்புரம் கடற்கரை பகுதியில் பதிவெண் இல்லாமல் சந்தேகத்திற்கு இடமான முறையில் தரித்து நின்ற நாட்டு படகினை சோதனை செய்தனர்.

அதில் இலங்கைக்கு கடத்துவதற்காக சுமார் 443 அட்டைகளில் 4430 வலி நிவாரண மாத்திரைகள் மீட்கப்பட்டன.

க்யூ பிரிவு பொலிஸார் மீட்கப்பட்ட வலி நிவாரண மாத்திரைகள் மற்றும் நாட்டுபடகு என்பவற்றை சுங்கத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். (4-33-100)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 260 | 240 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 240 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 500 | 600 |
| தக்காளி | .300 | 400 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 380 | 350 | 250 |
| கோவா | 360 | 350 | 300 | 360 |
| கரட் | 280 | 380 | 370 | 450 |
| பூசணி | 200 | 150 | 180 | 200 |
| புடோல் | 160 | 200 | 140 | 200 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 200 |
| பாகற்காய் | 700 | 600 | 700 | 600 |
| வெண்டக்காய் | 120 | 100 | 100 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 300 |
| பயற்றங்காய் | 250 | 400 | 400 | 600 |
| லீக்ஸ் | 260 | 250 | 260 | 300 |
| பீற்றூட் | 280 | 200 | 220 | 300 |
| கறிமிளகாய் | 600 | 700 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 350 | 500 |
| போஞ்சி | 400 | 500 | 420 | 600 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 150 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-80 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 280 | 250 | 200 | 360 |
| முள்ளங்கி | 160 | 150 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 100 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | 100 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.,கிளிநொச்சியில் இருந்து 6 பேர் தமிழகத்தில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 6 பேர் கடல் வழியாக தமிழகத்திற்கு சென்று அகதி அந்தஸ்து கோரியுள்ளனர்.

தமிழகம் தனுஷ்கோடிக்கு அருகில் உள்ள கம்பிப்பாடு எனும் இடத்தில் நேற்று புதன் கிழமை அதிகாலை கிளிநொச்சியில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச்சேர்ந்த 5 பேரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருமாக 6பேர் கொண்டு சென்று விடப்பட்டுள்ளனர்.

அது தொடர்பில் தகவல் அறிந்த கடலோர காவல் படை அவர்களை மீட்டு, மண்டபம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளின் போது, தாம் படகில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கொடுத்து வந்ததாக தெரிவித்தனர்.

பொருளாதார நெருக்கடியை காரணம் காட்டி, கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் நேற்று வரை இலங்கையில் இருந்து 129 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-33-285-100)

### தவறான இலக்க வண்டிக்கு

# நிரப்பப்பட்ட பெற்றோல் மீள பெறப்பட்டது

(கரணவாய்)

பெற்றோல் நிரப்பியவரின் பெற்றோலை மீளப் பெற்ற சம்பவம் ஒன்று வடமராட்சி குஞ்சர்கடை உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எரி பொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளது.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபட்ட போதிலும் தவறான இலக்கத்தில் ஒருவர் எரிபொருளை நிரப்பியுள்ளார். இது தொடர்பாக பொது மக்களால் கேள்வி எழுப்பப்பட்டு கரவெட்டி பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து அவரின் பணிப்பின் பேரில் குறித்த பெற்றோல் மீளப் பெறப்பட்டது. (4-60)

# கொக்குவில் கிழக்கு ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய மஹோற்சவம்

(குப்பிழான்)

கொக்குவில் கிழக்கு ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்தும் 11 தினங்கள் இவ்வாலய மஹோற்சவம் இடம்பெறவுள்ளதுடன் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் 10 ஆம் திகதி புதன் கிழமை காலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினம் மாலை கொடியிறக்க உற்சவமும் இடம்பெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (4-18)

## நெல்லியடி வர்த்தக நிலையங்கள் இன்று பூட்டு

(கரணவாய்)

நெல்லியடி வர்த்தக சங்க எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் யாவும் ஆடி அமாவாசை தினத்தை முன னிட்டு இன்று வியாழக்கிழமை பூட்டப்பட்டிருக்கும் என வர்த்தக சங்க செயலாளர் சுரேரஞ்சன் தெரிவித்துள்ளார். (4-60)


# திருநல்லூர் திருப்புகழ் வெளியீடும் இசை அர்ப்பணமும்

(குப்பிழான்)

இருபாலையூர் தவ.தஜேந்திரனால் பாடப் பெற்ற திருநல்லூர்த் திருப்புகழ் வெளியீட்டு நிகழ்வும் இசை அர்ப்பணமும் நிகழ்வும் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும் பிரபல சைவத்தமிழ்ச் சொற்பொழிவாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற உள்ளது.

மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் கலாநிதி. பொன்.பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் கலாநிதி. என்.சண்முகலிங்கன், ஈழத்தின் மூத்த கவிஞர் சோ.பத்மநாதன், யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

இதேவேளை, நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை, நடனத்துறை விரிவுரையாளர்கள் பங்குபற்றும் திருப்புகழ் இசை அர்ப்பணம் நிகழ்வும் பக்க வாத்திய சகிதம் நடைபெறும். (4-18)



வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்.மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயக் காம்யோற்சவப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று புதன்கிழமை காலை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றுதலுடன் பக்திபூர்வமாக நடைபெற்றது. (படங்கள்:- ரவிசாந்)

# கொக்குவில் அம்மன் வீதியில் இறால்களை வீசிய விசமிகள்

(குப்பிழான்)

கொக்குவில் கிழக்குப் பகுதியில் அம்மன் வீதியின் நடுவில் இனம்தெரியாத நபர்கள் அழுகிய இறால்களை இரவோடு இரவாக கொண்டு வந்து வீசி விட்டுச் சென்றுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரவு வேளையில் இவ்வாறு அழுகிய இறால்கள் கொண்டு வந்து வீசப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இதிலிருந்து கடும் துர்நாற்றம் வீசுவதால் அப்பகுதி மக்களும் குறித்த வீதியால் போக்குவரத்துச் செய்யும் மக்களும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். (4-18)

# இராசிபலன்

28.07.2022
ஆடி 12, வியாழக்கிழமை
அமாவாசை முன்னிரவு 11.48 மணிவரை

புனர்பூசம் காலை 8.20 மணி வரை
சுபநேரம் 7.32-9.02 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை

ஆடி அமாவாசை விரதம்,
சந்திராஷ்டமம் -மூலம்

வளவன்

**மேஷம்**: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்**: வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், போசன சுகமுண்டு, பயணத்தில் பலன் கிடைக்கும்.

**துலாம்**: தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மகரம்**: விட்டுப் போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்களால் வளர்ச்சி கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**ரிஷபம்**: தன்னம்பிக்கையோடு பணிபுரிவீர்கள், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், தொழிலை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாடு குதூகலம் தரும்.

**சிம்மம்**: திடீர் பயணமொன்று ஏற்படும் வாய்ப்புண்டு, சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்**: சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட் சேர்க்கைக்கு அத்திவாரமிடுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்**: மறைமுகப் போட்டிகள் மாறும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், பெண் வழி ஒத்துழைப்புக் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**மிதுனம்**: நிலையான வருமானத்துக்கு வழியமைத்துக் கொள்வீர்கள், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**கன்னி**: எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், செல்வ நிலை உயரும் நாள், விரதங்களில் நம்பிக்கை கூடும்.

**தனுசு**: கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், தொழிலில் போட்டிகள் அதிகரிக்கலாம், திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**மீனம்**: பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

பேச்சில் தீமை [illegible] தீமை கலந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிபோஷா உற்பத்தி மீண்டும் ஆரம்பம்




(கொழும்பு)

பல மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த திரிபோஷா உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திரிபோஷா உற்பத்திக்கு தேவையான சோளம் உள்ளிட்ட மூலப்பொருட்களுக்கான தட்டுப்பாடு காரணமாக திரிபோஷா உற்பத்தி கடந்த சில மாதங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து நாட்டில் திரிபோஷா உற்பத்தியை மீளவும் ஆரம்பிப்பதற்கான நிதியுதவியை வழங்க உலக உணவுத் திட்டம் அண்மையில் இணக்கம் தெரிவித்திருந்தது. உலக உணவுத் திட்ட அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இவ்வாறு இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே தற்போது திரிபோஷா உற்பத்தி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (நி)

# மகிந்த, பசிலுக்கான பயணத்தடை நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இலங்கையை விட்டு வெளியேறுவதைத் தடுக்கும் வகையில் ஓகஸ்ட் 2 ஆம் திகதி வரை உச்ச நீதிமன்றம் பயணத் தடையை நீடித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோர் 2022 ஜூலை 28 ஆம் திகதி வரை நாட்டை விட்டு வெளியேற தடை விதித்து ஏற்கனவே ஜூலை 15 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## குடியியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழாக அறிவித்தல்

# யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

1.கிறிஸ்துராசா றெஜினும்
2. பெண் மேரி நிரோஜினியும்
இருவரும்
இல.17,3ம் குறுக்குத்தெரு,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

**வழக்காளிகள்-**

வழக்கு இல : காணி/ 757/2018

**எதிர்**

1.சௌந்தரராஜா ஜீவராசா
போதகர்
பிளரெல்பியா மிசனறி சபை
இல.724.A9 வீதி
(கண்டி வீதி)
அரியாலை,
யாழ்ப்பாணம்.

**-எதிராளி**

மேற்படி இலக்க வழக்கின் வழக்காளிகளால் மேலே குறிப்பிடப்பட்ட எதிராளிக்கெதிராக திருத்திய பிராதின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனத்திற்கு வழக்காளிகளே சட்ட உரித்தாளிகளும் சொந்தக்காரர்களும் எனவும்,திருத்திய பிராதின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தினுள் குடியிருக்கும் எதிராளி அல்லது அவர்களது உறவினர்கள், முகவர்கள், தங்குநர்கள், ஏவலாட்கள் மற்றும் ஏனையோர் வெளியேற்றப்பட வேண்டும் எனவும் திருத்திய பிராதின் ஆதன அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தின் சமாதான ஆட்சி வழக்காளிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என பிரகடனப்படுத்தும் கோரிக்கையை பிரதான நிவாரணங்களாக கோரி இவ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனவே கூட்டிணைக்கப்படாத மிஷனரி சபைக்கு எதிரான வழக்கில் குறித்த சபையில் அக்கறையுடையோர் எவரும் எதிர்வாதிடலாம் என குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல் தரப்படுகின்றது.

மேலும் இவ் வழக்கானது 02.08.2022 ஆம் திகதி காலை 9.00 க்கு இம் மன்றின் திறந்த மன்றில் அழைக்கப்படவிருக்கின்றது என்றும் அறிவித்தல் தரப்படுகின்றது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியா தெரு இறை:-
" **கொல்லன் காட்டு வளவு** " நில. பர.06 குளி 1/2 உம் வான் பயிர் செய் பயிர்களும் இதற்கு எல்லை.

**கிழக்கு** - ஒழுங்கை
**வடக்கு** - கந்தையா பரமநாதனுக்கும் பெண் செயோசியா பேளிக்கும் உரிய ஆதனமும் புனித யூதா ஆலய வளவும்.
**மேற்கு** - கந்தையா சின்னத்துரை பெண் மகேஸ்வரியின் ஆதனம்.
**தெற்கு** - நவரத்தினம் பெண் இரஞ்சிதமலரினாதனம் இவ்வெல்லைப்படி இதடங்கலும்.

2022 ஆம் ஆண்டு 06 ம் மாதம் 28 ஆம் திகதி
வரைபு:

(12272)

**வழக்காளிகளின் சட்டத்தரணி**

**மன்றின் கட்டளைப்படி**
**பதிவாளர், மாவட்ட நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

# தங்கத்தின் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

தங்கத்தின் விலை உலக சந்தையில் நாளுக்கு நாள் ஏற்ற, இறக்கத்துடன் பதிவாகி வருகின்றது.

இந்நிலையில், ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை இலங்கை ரூபாவின் படி 621,081 ரூபாவாக பதிவாகியுள்ளது.

கடந்த காலங்களை விட தற்போது தங்கத்தின் விலை கணிசமான அளவு குறைந்துள்ளதாக உள்ளூர் தங்க விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் தங்க நிலவரத்தின்படி, 24 கரட் தங்கப் பவுண் ஒன்று 180,500 ரூபாவாக பதிவாகியுள்ளது. அதேபோல 22 கரட் தங்கப் பவுண் ஒன்று166,000 ரூபாவாக பதிவாகியுள்ளது.

இதேவேளை, கடந்த மாதங்களில் 22 கரட் தங்கப் பவுண் ஒன்று வரலாறு காணாத வகையில் உயர்ந்து 200,000 ரூபாவை எட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 26 3/4 சூரி 6 செவ் 8 இல்
உயரம்: 5'11'
தகைமை/தொழில்: பொறியியலாளர் (அமெரிக்கா)
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/12832

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பரணி 2
கி.பா: 19 1/2 சூரி 4 செவ் 10 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/12834

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூராடம் 1
கி.பா: சூரி 10 செவ் 9 இல்
உயரம்:185 cm
தகைமை/தொழில்: BSc, PGDE ஆசிரியர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: B/12835

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம் : பூராடம் 4
கி.பா: 65 1/2 சூரி 8 செவ் 9 இல்
உயரம்:5'10"
தகைமை/தொழில்: BSc பட்டதாரி (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு : பட்டதாரி உத்தியோகம்
தொ.இ: B/12839

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம் 4
கி.பா: 17 1/2 சூரி 6 செவ் 5 இல்
உயரம்:158 cm
தகைமை/ தொழில்: O/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர் வெளிநாடு மட்டும்.
தொ.இ: G/12840

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: சதயம் 2
கி.பா: சூரி 4 செவ் 1 இல்
உயரம்: 164 cm
தகைமை/தொழில்: BSc (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: உயர் பதவி உள்நாடு மட்டும் கொழும்பு விரும்பத்தக்கது.
தொ.இ: G/12847

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: மகம் 1
கி.பா: சூரி 9 செவ் 3 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS வைத்தியர்
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ:G/12853

பிறப்பு:1994 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: சூரி, செவ் 9
உயரம்:5'5"
தகைமை/ தொழில்: BSc (Hons) Software Engineer (தனியார்)
எதிர்பார்ப்பு : உயர்பதவி
தொ.இ:G/12859


**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



### சரியான அடி!

ஒரு ஊரில் ஒரு விவசாயி இருந்தான். அவன் மகன் கந்தனை வேலை செய்யச் சொல்லி கசக்கிப் பிழிந்து கொடுமைப்படுத்தி வந்தான். கந்தன் எவ்வளவு நன்றாக வேலை செய்தாலும் அவனது தந்தை அதில் ஏதாவது குறை கூறி தண்டித்து வந்தான். ஒரு வேலையை விரைவில் செய்து விட்டால் மற்றொரு வேலையை அவன் தலையில் சுமத்தி விடுவான்.

கந்தன் இருந்த ஊரில் முத்தாயி என்ற பெண் இருந்தாள். கந்தன் அவளை மணக்க விரும்பினான். முத்தாயிக்கும் அவனை மணந்து கொள்ள சம்மதமே. முத்தாயியின் தந்தையும் அந்தத் திருமணத்திற்குச் சம்மதித்தார். ஆனால், கந்தனின் தந்தையோ அதற்கு ஒப்புக் கொள்ளாமல் தன் மகனிடம் "உனக்கு சாப்பாடு போடுவதே தண்டம். அத்தோடு உன் மனைவிக்கும் சேர்த்தா கொட்ட வேண்டும்? நான் ஒப்ப மாட்டேன். நீயாக சம்பாதித்து அவளோடு தனியாகக் குடித்தனம் செய்ய முடியும் என்றால் தாராளமாக அவளை மணந்து கொள். ஆனால், என்னிடமிருந்து பைசா எதிர்பாராதே" என்றான்.

கந்தன் இனித் தானே சம்பாதிக்க வேண்டும் என்றும் தன் தந்தையிடம் வேலை செய்யக் கூடாது என்றும் நினைத்து ஒரு நாள் தன் தந்தையிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டு வெளியேறினான். ஊரை விட்டுப் போவதை முத்தாயியிடம் மட்டும் அவன் கூறினான்.

அவன் நடந்து நடந்து ஒரு காட்டுப் பகுதியை அடைந்தான். அங்கே ஒரிடத்தில் ஒரு கிழவியைக் கண்டான். அவள் விறகுக் கட்டு ஒன்றைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு மெதுவாக நடந்து போய்க் கொண்டிருந்தாள். கந்தன் அவளிடம் "பாட்டி! வயதான நீ ஏன் சிரமப்படுகிறாய்? உன் சுமையை நான் எடுத்து வருகிறேன்" என்றான். அவளும் "யாரப்பா நீ? எங்கே போகிறாய்?" என்று கேட்டவாறே விறகுக் கட்டைக் கந்தனிடம் கொடுத்தாள். கந்தனும் கிழவியிடம் தன்னைப் பற்றி கூறி "எங்காவது வேலை கிடைக்குமா என்று தான் போய்க் கொண்டிருக்கிறேன்.

(தொடரும்...)

# சிலப்பதிகாரம்

## மாதவிப் பெண் மயிலாள்




புகார் நகரமே செல்வத்தில் கொழிக்கும் நகரம். அதிலும் முத்துக்கள் அங்கே மிகச் சாதாரணம். மாதவிக்கு அந்த முத்து மாலை பெரிதாகத் தெரியவில்லை. அதைத் தான் அணியாமல் தன் தாயிடமே கொடுத்து விட்டாள்.

உயர்ந்த பொருட்களின் மதிப்பு தன் மகளுக்குத் தெரியாதது அவள் தாய்க்குச் சற்று வருத்தம்தான்.

அப்போதும், அவள் அரசர் அழைப்புக் காகக் கொஞ்ச நாள் காத்திருந்தாள்.

ஒரு கட்டத்தில், அரசர் அழைக்கப் போவதில்லை என்பது உறுதியாகிவிட்டது.

மாதவியின் தாய் ஏமாற்றத்தோடு அந்த மால்லையையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. தன் மனத்தில் இருக்கும் திட்டத்துக்கு மூலதனமாக அந்த மாலையைப் பயன்படுத்தத் தீர்மானித்தாள்.

பணிப் பெண்ணை அழைத்தாள். 'இந்த மாலையை எடுத்துக் கொண்டு நீ வணிக வீதிக்குப் போ. பணக்கார வாலிபர்கள் இருக்கிற இடமாக நின்று கொள். இதன் விலை ஆயிரத்தெட்டு பொற்காசுகள் என்றும், அதை வாங்குபவருக்கு மாதவி சொந்தம் என்றும் கூவி விலை பேசு" என்றாள்.

"நீங்கள் தவறாக எண்ணவில்லை என்றால் நான் ஒன்று கேட்கலாமா?" என்றாள் அந்தப் பணிப் பெண்.

'என்னது?'

'அரசர் பரிசாகக் கொடுத்த மாலை பெருமைக்குரியது அல்லவா? அதை ஏன் விற்கிறீர்கள்?'

'வசதியான வாழ்க்கைக்குப் பெருமை மட்டும் போதாது' என்று சிரித்தாள் மாதவியின் தாய். 'தவிர, இந்த ஆயிரத்தெட்டுப் பொற்காசுகளில் என்ன பெரிய வசதி வந்துவிடப்போகிறது?

நம்மிடம் இருக்கும் செல்வத்துடன் ஒப்பிட்டால் ஆயிரத்தெட்டு பொற்காசுகள் பெரிய தொகை இல்லை. ஆனால் இந்த விற்பனை ஒரு மூலதனம்.'

'விற்பனைக்கு மூலதனம் தேவை. விற்பனையே எப்படி மூலதனமாகும்?' 'கணிகையர்கள் அழகில் மட்டுமில்லை, அறிவிலும் உயர்ந்திருக்கிறவர்கள் என்பதை நீ அறிய வேண்டும்' 'எனக்கு இதிலிருக்கும் சூட்சுமம் புரியவில்லை.'

'இது ஒரு சாதாரண விற்பனை இல்லை. அலட்சியமாக ஆயிரத்தெட்டு பொற்காசுகளைச் செலவு செய்கிற வசதி படைத்தவனை அடையாளம் காண்கிற முயற்சி. .

மாதவியின் மேல் இருக்கும் கிறக்கத்தில் அதன் பிறகு அவன் வாரி இறைக்கப் போகும் செல்வம் தான் நமக்கு நிஜமான வருமானம்.'

பணிப்பெண்ணுக்கு விபரம் புரிந்தது. மாலையை எடுத்துக் கொண்டு வணிக வீதிக்குப் போனாள். கோவலனைப் பொறியில் சிக்கவைத்து அழைத்து வந்துவிட்டாள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்பது உட்கார்ந்து ஊஞ்சல் ஆடுவது அன்று; புயலுக்கு நடுவே படகைச் செலுத்துவது போன்றது. – காண்டேகர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பதவியைப் பாதுகாக்க ஜனாதிபதி ரணில் வகுத்த வியூகம்

“இளம் செயற்பாட்டாளர்களாலேயே இந்த மாற்றம் சாத்தியமானது” என்பதை ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்த விடயம் இங்கு நோக்குதற்குரியது.

அதாவது ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதையடுத்து அவருக்கான வாழ்த்துச் செய்தியிலேயே சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

அவர் கூறிய மேற்போந்த கருத்தில் போராட்டக்காரர்களைக் கைது செய்வது, சிறையில் அடைப்பது, நீதிமன்றில் நிறுத்துவது ஆகிய காரியங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ளலாம்.

அவ்வாறு அவர் அதைச் செய்தால் போராட்டத்தின் முன்னிலைச் செயற்பாட்டாளர்கள் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை ஏற்படும்.

ஆகவே இளம் செயற்பாட்டாளர்களாலேயே இந்த மாற்றம் சாத்தியமாயிற்று என்பதைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் தாங்கள் ஜனாதிபதியாக வருவதற்கு அவர்களே காரணம்.

ஆகையால் அவர்களை எந்தவகையிலும் வஞ்சித்து விடக்கூடாது என்ற செய்தியைத் தெரிவிப்பது சந்திரிகாவின் நோக்கமாக இருந்தது.

எனினும் அதுபற்றி கிஞ்சித்தும் ஜனாதிபதி ர்ணில் விக்கிரமசிங்க கருத்தில் எடுக்கவில்லை.

மாறாக ஆர்ப்பாட்டம், ஜனாதிபதி மாளிகை முற்றுகை மற்றும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபன விவகாரம் என்பன தொடர்பில் முன்னிலைச் செயற்பாட்டாளர்களாக இருந்த இளைஞர்களைக் கைது செய்வதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடுமையான உத்தரவைப் பிறப்பித்துள்ளமை தெரிகிறது.

காலிமுகத்திடல் போராட்டம் நடைபெற்ற போது மகிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகினார். அந்தப் பதவியைப் பொறுப்பெடுத்த ரணில் விக்கிரமசிங்க அப்போதெல்லாம் போராட்டக்காரர்களுக்கு எதுவும் செய்யக்கூடாது என நிபந்தனையிட்டார்.

பின்னர் பதில் ஜனாதிபதியாகப் பொறுப்பெடுத்தபோதும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது எந்தக் குற்றச்சாட்டையும் அவர் முன்வைக்கவில்லை.

ஆனால் அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்றதுதான் தாமதம் காலிமுகத்திடலுக்குள் இரவோடு இரவாகப் புகுந்த படையினர் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

கண்மூடித்தனமாக நடத்தப்பட்ட அத்தாக்குதல் உலகநாடுகளின் கண்டனத்துக்கு ஆளாகியது.

இது ஜனாதிபதி ரணிலை கடுமையாகப் பாதித்திருந்தது.

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தில் மும்முரமாக ஈடுபட்டவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்பதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மக்கள் எழுச்சியைக் கட்டுப்படுத்துவதே ஜனாதிபதி ரணிலின் நோக்கமாகவுள்ளது.

ஆயினும் அது எந்தளவுக்குச் சாத்தியமாகும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# நாட்டுக்காக போராடியவர்கள் மீது தாக்குதல் நடத்த வேண்டாம்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

போராட்டக்காரர்கள் மீது தாக்குதல்களை நடத்த வேண்டாம் என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற அவசரகால சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் உரையாற்றிய போதே சரத் பொன்சேகா இந்த கோரிக்கையை விடுத்தார்.

போராட்டக்காரர்கள் நாட்டுக்காக போராடினார்கள். அவர்கள் எங்களின் உறவினர்கள்.

எனவே அவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டாம். அதேநேரம் ஊழல் அரசியல்வாதிகளை பாதுகாக்க வேண்டாம் என்றும் சரத் பொன்சேகா கேட்டுக்கொண்டார்.

இவ்வாறான தாக்குதல்கள் மூலம் இலங்கை இராணுவத்துக்கு கிடைத்த பெருமையை பழுதாக்க வேண்டாம் என்றும் சரத் பொன்சேகா கேட்டுக்கொண்டார்.

இதேவேளை போராட்டவாதிகள் மத்தியில் பல்வேறு கொள்கைகள் இருக்கின்றபோதும், ஒரே கொள்கைக்காக ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்தநிலையில் ஒருவரை இருவரை அகற்றியதன் மூலம் தூய்மையான அரசியலை ஏற்படுத்தமுடியாது.

எனவே எதிர்வரும் 9 ஆம் திகதியன்று கொழும்பில் ஒன்றுகூடி ஊழல் அரசியல்வாதிகளுக்கு எதிராக போராட்டம் நடத்தப்படும் என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

இந்தநிலையில்போராட்டவாதிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கேட்டுக்கொண்டார். (ம-7)

# கைதடி IOC நிறுவனத்தால் மதகுருமார்களுக்கு எரிபொருள் விநியோகம்

## சைவக்குருமார் சபை நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விசேட ஏற்பாட்டின் கீழ் கைதடி IOC எரிபொருள் நிலையத்தால் சர்வ மதகுருமார் சபைக்கு நேற்று எரிபொருள் வழங்கப்பட்டது. இதற்கு நன்றி தெரிவித்து அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபையின் செயலாளர் சிவஸ்ரீ ச.மகாலிங்கசிவக் குருக்கள் செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

அச் செய்திக் குறிப்பில்,

எரிபொருள் பெற்றுக் கொள்வதில் உள்ள சிரமத்தால் ஆலயத் தொண்டில் ஈடுபட்டிருக்கும் மதகுருமார்களும் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். இதனைக்கருத்திற்கொண்டு நேற்றைய தினம் நுணாவில் IOC எரிபொருள் நிலையத்தினரால் சர்வ மதகுருமார்களுக்கு விசேட ஏற்பாட்டில் எரிபொருள் வழங்கப்பட்டது.

குறிப்பாக இன்றைய தினம் (28.07.2022) ஆடி அமாவாசை என்பதால் இவ் விசேட ஏற்பாட்டால் இந்துக் குருமார்கள் மிகுந்த பயனைப் பெற்றுக் கொண்டார்கள்.

இதற்கு ஏற்பாடு செய்த எரிபொருள் நிலைய உரிமையாளர் வைத்திலிங்கம் சிவராசா அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் கடமையிலிருந்த அரச உத்தியோகத்தர்களுக்கும் எரிபொருள் நிலைய ஊழியர்களும் எமது நன்றிகள் என அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கோட்டாவுக்கு அழைப்பாணை

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவிற்கு உயர் நீதிமன்றம் அழைப்பாணை ஒன்றை அனுப்பவுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அழைப்பாணை அனுப்ப உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

நாட்டையும் மக்களையும் அவல நிலைக்கு இட்டு சென்றவர்களுக்கு எதிராக விசாரணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த மனுவுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தனிப்பட்ட பிரதிவாதியாக பெயரிட உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு தீர்மானித்துள்ளது. (ம-7)

# கடனட்டை வட்டி விகிதம் 36 சதவீதமாக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள பல வர்த்தக வங்கிகள் கடன் அட்டைகளுக்கான வருடாந்த வட்டி வீதத்தை மேலும் அதிகரித்துள்ளன.

இதன் மூலம் கடன் அட்டைக்கான வருடாந்த வட்டி விகிதம் 36 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக வங்கிகள் தெரிவித்துள்ளன.

ஏப்ரல் 08 ஆம் திகதி மத்திய வங்கியின் நாணயச் சபையானது கடன் அட்டைகளுக்கு வழங்கப்படும் வட்டி விகிதங்களில் விதிக்கப்பட்ட உச்ச வட்டி விகிதத்தை நீக்க தீர்மானித்ததை தொடர்ந்து, வட்டி விகிதங்கள் 18 வீதத்திலிருந்து 24 வீதமாகவும், அதனை தொடர்ந்து 30 வீதமாகவும், இப்போது மீண்டும் 36 சதவீதமாகவும் வங்கிகள் தமது வட்டி விகிதத்தை அதிகரித்துள்ளன. (ம-7)

# அம்பலாங்கொடையில் துப்பாக்கிச் சூடு

## இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அம்பலாங்கொட, கலகொட பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத நபர் ஒருவர் சுட்டதில் இருவர் உயிரிழந்துள்ளனர். நேற்று இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், மற்றையவர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் கலகொட பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடையவர் மற்றும் 44 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அம்பலாங்கொட, உடவத்தையில் ஒருவர் கொல்லப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் தொடர்புடையதாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ம-7)

# காலி முகத்திடலில் தேரர்களின் கூடாரங்களும் அகற்றப்பட்டன

(கொழும்பு)

காலி முகத்திடலில் பண்டாரநாயக்க சிலை அருகில் இருந்த தேரர்களின் கூடாரங்கள் அகற்றப்பட்டன.

காலி முகத்திடலிலுள்ள பண்டாரநாயக்க சிலையின் அமைவிடத்திற்கு அருகிலுள்ள பௌத்த தேரர்கள் சிலரின் கூடாரங்களை அகற்றுமாறு பொலிஸார் நேற்று மீண்டும் அறிவித்தல் வழங்கினர்.

குறித்த பகுதிக்கு சென்றிருந்த பொலிஸாருக்கும் தேரர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

தேரர்கள் அங்கிருந்து கூடாரங்களை அகற்றி விட்டு செல்லாவிட்டால், கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டி ஏற்படும் என பொலிஸார் இதன்போது எச்சரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து, எவருக்கும் பிரச்சினை கொடுக்க விரும்பவில்லை என தெரிவித்து தேரர்கள் நேற்று நண்பகல் 12 மணியளவில் தமது கூடாரத்தை அகற்றினர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 38

ஏப்ரல் 1993 இன் பிற்பகுதியில், 162 உக்ரைனிய அரசியல்வாதிகள் START இன் ஒப்புதலுக்கான 13 முன் நிபந்தனைகளைச் சேர்க்க ஓர் அறிக்கையில் கையெழுத்திட்டனர். இந்நடவடிக்கை START ஒப்புதல் செயல்முறையை ஏமாற்றியது. இம் முன்நிபந்தனைகளின்படி ரஷ்யா மற்றும் அமெரிக்காவிடமிருந்து பாதுகாப்பு உத்தரவாதம், அகற்றலுக்கான வெளிநாட்டு உதவி மற்றும் அணுசக்தி பொருட்களுக்கான இழப்பீடு ஆகியவை கோரப்பட்டன.


மேலும் உக்ரைன் அதன் போர் வாகனங்களில் 36 சதவீதத்தையும் அதன் போர்த்தளபாடங்களில் 42 சதவீதத்தையும் மட்டுமே அகற்றும் என்றும், மீதமுள்ளவற்றை உக்ரைனிய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் என்றும் அவர்கள் கூறினர்.

ரஷ்யாவும் அமெரிக்காவும் இந்தக் கோரிக்கைகளை விமர்சித்தன, ஆனால் உக்ரைன் அசையவில்லை. மே 1993 இல், உக்ரைன் START க்கு ஒப்புதல் அளித்தால், வோஷிங்டன் கூடுதல் நிதி உதவியை வழங்கும் என்று அமெரிக்கா கூறியது. இது உக்ரைன், ரஷ்யா மற்றும் அமெரிக்கா இடையே உக்ரைனிய அணு ஆயுத ஒழிப்பின் எதிர்காலம் குறித்து அடுத்தடுத்த விவாதங்களைத் தொடங்கியது.

### 1993 மசாண்ட்ரா ஒப்பந்தங்கள் (Massandra Accords)

உக்ரைனிய மற்றும் ரஷ்ய அதிகாரிகள் அணு ஆயுதங்களை அகற்றுவதற்கான நெறிமுறைகள், நடைமுறை மற்றும் இழப்பீட்டு விதிமுறைகள் உள்ளிட்ட ஒப்பந்தங்களின் தொகுப்பை எட்டினர். இருப்பினும், இறுதி ஆவணத்தில் இரு தரப்பினரும் உடன்படமுடியவில்லை. மேலும் உச்சிமாநாடு இறுதியில் தோல்வியடைந்தது.

**உக்ரைனின் அணுஆயுத ஒழிப்புக்கு மசாண்ட்ரா ஒப்பந்தங்கள் களம் அமைத்தன. ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையில் அமெரிக்கா மத்தியஸ்தம் செய்ததால், மூன்று நாடுகளும் ஜனவரி 14, 1994 அன்று முத்தரப்பு அறிக்கையில் கையெழுத்திட்டன.**



அமெரிக்க அதிபர் பில் கிளின்டன், ரசிய அதிபர் போரிஸ் யெல்ட்சின், உக்ரைன் அதிபர் லியோனிட் கிராவ்சுக்,1994.

### 1994 முத்தரப்பு அறிக்கை (Trilateral Statement)

அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் பொருளாதார ஆதரவு மற்றும் பாதுகாப்பு உத்தரவாதங்களுக்கு ஈடாக, மூலோபாய ஆயுதங்கள் உட்பட முழு ஆயுதக் குறைப்புக்கு உக்ரைன் உறுதியளித்தது.

உக்ரைன் தனது அணு ஆயுதங்களை ரஷ்யாவிற்கு மாற்ற ஒப்புக் கொண்டது மற்றும் ஏவுகணைகள், குண்டு வீச்சுகள் மற்றும் அணுசக்தி உட்கட்டமைப்பை அகற்றுவதில் அமெரிக்காவின் உதவியை ஏற்றுக் கொண்டது.

உக்ரைனின் போர்த் தளபாடங்கள் அகற்றப்படும். மேலும் அதிக செறிவூட்டப்பட்ட யுரேனியத்தின் வணிக மதிப்பிற்கு உக்ரைன் இழப்பீடு பெறும். உக்ரைன் பெப்ரவரி 3, 1994 இல் START ஐ அங்கீகரித்தது. அதன் முந்தைய முன் நிபந்தனைகளை ரத்து செய்தது, ஆனால் கூடுதல் பாதுகாப்பு உத்தர வாதங்கள் இல்லாமல் அது NPT உடன் சேராது என்றது.

### 1994 புடாபெஸ்ட் குறிப்பாணை (Budapest Memorandum) பாதுகாப்பு உத்தரவாதங்கள்

உக்ரைன், அமெரிக்கா, ரஷ்யா மற்றும் இங்கிலாந்து ஆகியவற்றிற்கான பாதுகாப்பு உறுதிப்பாட்டை உறுதிப்படுத்த டிசம்பர் 5, 1994 அன்று பாதுகாப்பு உத்தரவாதங்கள் குறித்த புடாபெஸ்ட் குறிப்பாணையில் கையெழுத்திட்டன.

ஹெல்சின்கி உடன்படிக்கைகளின் கொள்கைகளுக்கு இணங்க இந்த அரசியல் உடன்படிக்கை, உக்ரைனின் பிரதேசம் அல்லது அரசியல் சுதந்திரத்திற்கு எதிரான அச்சுறுத்தல் அல்லது சக்தியைப் பயன்படுத்துவதற்கு எதிரான பாதுகாப்பு உத்தரவாதங்களை உள்ளடக்கியது.

(தொடரும்)

# குரங்கு அம்மை நோய்
# பெருந்தொற்றாக உருவெடுக்காமல் தடுக்க வேண்டும்- உலக சுகாதார நிறுவனம்

(ஜெனிவா)

**குரங்கு அம்மை பரவல் ஓர் எச்சரிக்கை மணி என உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி சௌமியா சாமிநாதன் தெரிவித்தார்.**

உலகம் முழுவதும் 75 நாடுகளுக்கும் மேல் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு குரங்கு அம்மை பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நாம் எப்போதுமே வைரஸ் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

குரங்கு அம்மையானது குரங்கு அம்மை வைரஸால் உருவாகிறது. இது ஆர்தோபாக்ஸ் வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்தது. ஒருவகையில் இது 1980 களில் ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பெரியம்மை நோயை ஏற்படுத்தும் ஆர்த்தோபாக்ஸ் வைரஸை ஒத்த பண்புகளைக் கொண்டது.

1979, 1980 களுக்குப் பின்னர் பெரியம்மை தடுப்பூசி பரவலாக நிறுத்தப்பட்டுவிட்டது. இதுவும் கூட இந்த வைரஸ் இப்போது மீண்டும் உலகில் உலா வர காரணமாகியுள்ளது.

பெரியம்மை தடுப்பூசிகளே குரங்கு அம்மைக்கு எதிராக பாதுகாப்பு நல்கினாலும் கூட குரங்கு அம்மைக்கு என பிரத்தியேகமாக தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன என அவர் தெரிவித்தார். (நி)

# சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து வெளியேறுவதாக ரஷ்யா அறிவிப்பு

(மொஸ்கோ)

2024 ஆம் ஆண்டுக்கு பின்னர் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து வெளியேறி அதற்கு பதிலாக தனது சொந்த நிலையத்தை உருவாக்கப் போவதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

அமெரிக்காவும் ரஷ்யாவும் ஏனைய நாடுகளுடன் இணைந்து 1998 முதல் சர்வதேச விண்வெளி நிலையத்தில் வெற்றிகரமாக இணைந்து பணியாற்றி வருகின்றன.

ஆனால், ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்ததில் இருந்து இந்த உறவுகள் மோசமடைந்துள்ள நிலையில் ரஷ்யாவின் விண்வெளி நிறுவன புதிய தலைவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஐந்து விண்வெளி நிறுவனங்களை உள்ளடக்கிய இந்த கூட்டுத்திட்டம், 1998 முதல் பூமியைச் சுற்றி வருகின்றதோடு ஆயிரக்கணக்கான அறிவியல் சோதனைகளை நடத்தப் பயன்படுத்தப்பட்டது.

எனினும் உடன்படிக்கையுடன் மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடிக்க அமெரிக்கா விரும்புகின்ற நிலையில் ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனான சந்திப்பின் பின்னர் இந்த முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இது குறித்து அமெரிக்க விண்வெளி நிறுவனத்துக்கு இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என ரஷ்யாவின் விண்வெளி நிறுவன தலைவர் குறிப்பிட்டுள்ளார். (நி)


# பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டின் வடக்கு பகுதியில் 7.1 என்ற ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸ் நாட்டின் தலைநகர் மணிலாவில் இருந்து 300 கிலோமீற்றர் தொலைவில் வடக்கு பகுதியில் லுசோன் தீவில் மலைகள் சூழ்ந்த அப்ரா மாகாணம் உள்ளது.

அப்ரா மாகாணத்தின் டோலோரஸ் பகுதியில் நேற்று காலை திடீரென்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

6.8 ரிக்டர் முதல் 7.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால்



பொது மக்கள் அலறியடித்து வீடுகளை விட்டு ஓட்டம் பிடித்தனர்.

பிலிப்பைன்ஸில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டாலும் கூட சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை என்று அமெரிக்க புவியியல் ஆய்வகம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாள்வெட்டு...

கம் வாள்வெட்டாக மாறியுள்ளது.

வாள்வெட்டிற்கு இலக்கான முள்ளியவளை தெற்கினை சேர்ந்த குடும்பஸ்தரான 32 வயதுடைய பெருமாள் சதீஸ்வரன் என்பவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

சடலம் மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## ஹெரோயின்...

இளைஞன் போதைப் பொருளுக்கு அடிமையாகிய நிலையில் அண்மையில் இருதயத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு மருத்துவர்களினால் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

எனினும் கடந்த திங்கட்கிழமையும் மீளவும் ஊசிமூலம் போதைப்பொருளை இளைஞன் எடுத்துக் கொண்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இளைஞனின் உயிரிழப்புக்கு போதைப் பொருளினால் இருதயத்தில் ஏற்பட்ட கிருமித்தொற்றுத்தான் காரணம் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனையினால் இந்த மாதத்தில் இரண்டாவது உயிரிழப்பு இது என்பதுடன் அண்மைய நாட்களில் 10இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். (ம-7,33)

## கொரோனா...

உயிரிழந்தவர்களில் 30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்ட பெண் ஒருவரும் 60 வயதுக்கு மேற்பட்ட இரு ஆண்களும் ஒரு பெண்ணும் அடங்குவர்.

அதன்படி, நாட்டில் பதிவான மொத்த கோவிட் இறப்புகளின் எண்ணிக்கை 16,548 ஆகும்.

இதேவேளை, நேற்று மேலும் 154 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## ராஜபக்ஷக்கள்...

னணியும் ஆதிக்கம் செலுத்தக்கூடாது. அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியவாறு சர்வகட்சி அரசு அமைவதே நாட்டுக்கு நல்லது."

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது, "முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இருவரையும் மக்கள் விரும்பவில்லை. இதனால்தான் மக்கள் நாடெங்கும் போராட்டம் நடத்தினார்கள்.

புதிய ஜனாதிபதியை பாராளுமன்றம் தெரிவு செய்துள்ளது. புதிய பிரதமரை ஜனாதிபதி தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி தெரிவு செய்துள்ளார்.

இந்தநிலையில், இடைக்கால சர்வகட்சி அரசு அவசியம். தனியொரு கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆட்சியைக் கொண்டு நடத்த முடியாது. அனைவரது ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் மிகவும் அவசியம். ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற பேதம் இல்லாமல் சர்வகட்சி அரசு அமையவேண்டும்.

இதேவேளை, புதிய பிரதமர் தொடர்பில் சர்வகட்சி அரசுதான் தீர்மானிக்க வேண்டும்" என்றார். (ம-7)

## ஜனநாயக...

துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிக்கையொன்றில் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனநாயக அரசு என்ற முறையில், பொதுமக்களின் போராட்டங்களுக்கு செவிசாய்க்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

அகிம்சை வழியில் செயற்படும் மக்களின் அகிம்சைக் குரலுக்காக அரசு என்ற முறையில் இணைந்து செயற்படுகிறோம்.

ஆனால் தீவிரவாதத்தை ஏற்க முடியாது. ஜனநாயகத்திற்கு எதிரான பெரும் அச்சுறுத்தலை பயங்கரவாதமாக மாற்றுவதற்கு ஆதரவளிக்க மாட்டோம் என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## தமிழர் பிரச்சி...

பாராளுமன்றில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற அவசரகால சட்டத்தின் மீதான விவாதத்தின்போது உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்கள் மத்தியில் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பேச்சுவார்த்தைகளின் ஊடாக தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது அவசியமாகும்.

எதிர்கால தலைமுறையினருக்கு இப்பிரச்சினைகளை மீதப்படுத்தக் கூடாது என்பதை தமிழ் அரசியல் தரப்பினர் விளங்கிக்கொள்ள வேண்டும். புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தலைவர்களுடன் வெளிப்படைத் தன்மையுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயார் என விஜயதாஸ ராஜபக்ஷ சபையில் வலியுறுத்தினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு காலம் காலமாக பல பிரச்சினைகள் உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தில் நீதியமைச்சராக பதவி வகிக்கையில் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உரிய நடவடிக்கையினை முன்னெடுத்தேன். காணாமலாக்கப்பட்டோரது காரியாலயம் ஸ்தாபித்தோம். இருப்பினும் அதன் செயற்பாடு மந்தகரமாக உள்ளது. துரிதப்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளோம். நட்டஈடு வழங்கும் காரியாலயத்தின் செயற்பாட்டை விரிவுபடுத்த தீர்மானித்துள்ளோம்.

தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினரை பிற இனத்தவர்கள் என ஒருபோதும் வேறுபடுத்தவில்லை. இலங்கையர்கள் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு ஒன்றிணைந்து செயற்படுகிறோம்.

நாட்டை முன்னேற்றுவோம். நாம் இலங்கையர்கள் என வெளிநாடுகளில் குறிப்பிடுவது வெட்கமாகவுள்ளது. பிரச்சினைகளுக்கு ஒன்றிணைந்து தீர்வு கண்டு கௌரவமான சமூகம் என்பதை உறுதிப்படுத்துவோம் என்றார். (ம-7)

## கோட்டாபயவுக்கு...

தங்களை மேற்கொண்டு வந்ததாக விமல் வீரவன்ச குற்றம் சுமத்தினார்.

இதேவேளை போராட்டவாதிகள் சிலர் இருந்தபோதும் இன்று அந்த இடத்தில் அராஜவாதிகள் செயற்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே இந்த அராஜவாதிகளிடம் இருந்து இலங்கை அரசை காப்பாற்ற வேண்டும். இதன் காரணமாகவே தாம் அவசரகால சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளதாக விமல் வீரவன்ச தெரிவித்தார். (ம-7)

## மனி...

என்று இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் பதிவிட்டுள்ள டுவிட்டர் பதிவில்,

"நெருக்கடியான கால கட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக்களை ஏற்றுள்ளார்.

இலங்கையில் அரசியல், பொருளாதார நெருக்கடிகள் எவ்வாறு உருவாகின என்பது தொடர்பிலும் சுபீட்சமான எதிர்காலமொன்றை நோக்கிச் செல்வதற்கு எவ்வாறு இரு நாடுகளும் இணைந்து பயணிக்க முடியும் என்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடினோம் என்று குறிப்பிட்டார். (ம-7)

## அவசரகாலச்...

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற வாத விவாதங்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பின்போது யோசனைக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 63 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அவசரகால சட்டம் ரணில் விக்கிரமசிங்கவினால் ஜூலை 17ஆம் திகதியன்று நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அரச பயங்கரவா...

மோசமான தீர்மானம் எடுக்கப்பட்டது. வன்முறை தலைதூக்கியது. அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டது.

இதன்பின்னரும் ஆட்சியமைக்க நாம் வருவோம் என்று நம்பிக்கை வைப்பது முட்டாள்தனமானது. மக்கள் ஆணைக்கு எதிரான, காட்டிக்கொடுக்கும் தீர்மானத்தை எடுக்க ஐக்கிய மக்கள் சக்தியோ, கூட்டணியோ தயாரில்லை என்றார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2022/07/27
சீட்டிழுப்பு இலக்கம் 4829
ஆங்கில எழுத்து: L
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 6 2 0 2 1 7
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன
சீட்டிழுப்பு திகதி 2022.07.27
சீட்டிழுப்பு இலக்கம் 138
வெற்றி இலக்கங்கள்: சிம்மம் 07 25 39 41 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 27/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1177
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்கம் / வெற்றி இலக்கங்கள்: B 04 03 12 30 44

கொவிசெத
திகதி 2022.07.27
சீட்டிழுப்பு இலக்கம் 3071
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்: O 16 17 18 57
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.07.27
சீட்டிழுப்பு இலக்கம் - 859
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்: C 14 55 56 70

அத கோடிபதி
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1630
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.07.27
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,823,920/-
வெற்றி இலக்கங்கள்: 15 51 75 77
ஆங்கில எழுத்து: Y

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.07.27
சீட்டிழுப்பு இல: 3965
வர்ணம்: சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,796,340/-
வெற்றி இலக்கங்கள்: 01 15 21 70
ஆங்கில எழுத்து: P

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,647,416/-
திகதி 2022-07-27
வெற்றி வாரம் 3516
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள்: 16 28 38 61
கடகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,597,240/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 05 42 49 52 63
சீட்டிழுப்பு வாரம் 980
வர்ணம் பச்சை
திகதி 2022.07.27 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 250,056,823/-
தொலைபேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1839
சீட்டிழுப்பு திகதி 2022-07-27
வெற்றி இலக்கங்கள்: 42 55 58 61
ஆங்கில எழுத்து: Y
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 34,229,884/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1804
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022.07.27
தினம் புதன்கிழமை
S 11 45 50 59
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,013,340/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை நெருக்கடியால் பாதிக்கப்பட்டவேளை

# இந்தியா துரிதமாக உதவியது சீனா உதவிக்கு பதிலளிக்கவில்லை

## சமந்தா பவர் தெரிவிப்பு



(புது டில்லி)

இலங்கை பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு இந்தியா துரிதமாக உதவியது. ஆனால் உதவிக்காக விடுக்கப்பட்ட வேண்டுகோள்களிற்கு சீனா பதிலளிக்கவில்லை என யுஎஸ் எயிட்டின் தலைமை நிர்வாகி சமந்தா பவர் தெரிவித்துள்ளார்

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள சமந்தா பவர், புது டில்லி ஐஐடியில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவதற்கான உதவும் மிக முக்கியமான நடவடிக்கைகளுடன் இந்தியா துரிதமாக பதில் நடவடிக்கையில் ஈடுபட்டது என சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் சீனா கணிசமான நிவாரணத்தை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு இறுதிவரை பதில் அளிக்கவில்லை எனவும் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய கடன்வழங்குநர்களைவிட வெளிப்படைத்தன்மையற்ற கடன்களை உயர் வட்டிக்கு வழங்கியதன் மூலம் சீனா இலங்கைக்கு பெருமளவு கடன்வழங்கிய நாடாக மாறியது என குறிப்பிட்டுள்ள சமந்தா பவர் இலங்கைக்கு உதவுவதற்காக சீனா கடன் மறுசீரமைப்பில்ஈடுபடுமா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்தியா மிகவேகமாக முற்றிலும் முக்கியமான நடவடிக்கைகளுடன் விரைந்தது எனவும் தெரிவித்துள்ள அவர், இலங்கை வங்குரோத்து நிலையையும் மேலும் வீழ்ச்சியையும் தடுப்பதற்கு உதவுவதற்காக இலங்கைக்கு இந்தியா வழங்கிய 3.5 பில்லியன் டொலர் கடனுதவி குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் 2000ஆம் ஆண்டு முதல் அதிகளவில் இலங்கைக்கு விரும்பி கடனுதவி வழங்கிய சீனா இந்தியாவிற்கு நேர்மாறான விதத்தில் செயற்பட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு தசாப்த காலத்தில் இலங்கைக்கு வெளிப்படைத்தன்மையற்ற அதிக வட்டியுடனான கடன்களை வழங்கியதன் மூலமும், மிகச்சிறிய வருமானத்தை கூட பெற்றுத்தராத கப்பல்கள் ஒருபோதும் பயன்படுத்தாத பாரிய துறைமுகம் உட்பட சந்தேகத்திற்குரிய நடைமுறைப் பயன்பாட்டுக்குரிய உட்கட்டமைப்பு திட்டங்களிற்கு உதவி வழங்கியதன் மூலமும் சீனா இலங்கைக்கு அதிக கடன் வழங்கிய நாடாக மாறியது எனவும் சமந்தா பவர் தெரிவித்துள்ளார்.

உலக நாடுகள் நெருக்கடியை எதிர்கொள்ளும் தருணங்களில் இந்தியா உதவியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனா இலங்கைக்கு கடனுதவி வழங்குவதாக உறுதியளித்தது. ஆனால் அவற்றை வழங்கவில்லை எனத் தெரிவித்துள்ள சமந்தா பவர் தனது உரையில் ஜனநாயக கொள்கைகளை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். (ம-7)

# எரிபொருள் முறைகேட்டை தடுக்கும் பொலிஸாருக்கு

## பணப் பரிசு வழங்க ஏற்பாடு



(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் எரிபொருளினை சேகரித்து அதிக விலைக்கு விற்பனை செய்பவர்களை கைது செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு 50 ஆயிரம் முதல் 3 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமான பணப்பரிசு வழங்கப்படவுள்ளது.

பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இதற்கமைய 100 லீற்றர் வரையான பெற்றோல் அல்லது டீசலை கைப்பற்றும் அதிகாரிகளுக்கு 50 ஆயிரம் ரூபாயும் 100 முதல் 500 லீற்றர் வரையிலான எரிபொருளை கைப்பற்றும் அதிகாரிகளுக்கு 2 இலட்சம் ரூபாயும் பரிசாக வழங்கப்படவுள்ளது.

அத்துடன் 500 முதல் 1000 லீற்றர் வரையான எரிபொருளைக் கைப்பற்றுவோருக்கு 3 இலட்சம் ரூபாயும் வழங்கப்படவுள்ளது.(ம-7)

### சீனாவுடன் பேச்சை ஆரம்பியுங்கள்

# சர்வதேச நாணய நிதியம் இலங்கையிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை தமது இருதரப்பு கடன் வழங்குநரான சீனாவுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் கோரியுள்ளது.

இலங்கை, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனை எதிர்பார்த்துள்ள நிலையிலேயே இந்த கோரிக்கையை சர்வதேச நாணய நிதியம் விடுத்துள்ளது.

சீனா இலங்கையை பொறுத்தவரை பாரிய கடன் வழங்குநராக உள்ளது.

எனவே மேலும் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக இலங்கை சீனாவுடன் தீவிரமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் துறையின் இயக்குநர் கிருஷ்ணா சீனிவாசன் ரொய்ட்டர் செய்திச் சேவையிடம் தெரிவித்துள்ளார்.

2.2 கோடி மக்கள் வசிக்கும் இலங்கையின் வரலாற்றில் மிகக் கடுமையான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதன்படி எரிபொருள் இறக்குமதியை 12 மாதங்களுக்கு கட்டுப்படுத்த அரசாங்கம் அண்மையில் தீர்மானித்துள்ளது.

இன்ஸ்டிடியூட் ஒஃப் இன்டர்நேஷனல் ஃபைனான்ஸ் தரவுகளின்படி வங்கிக் கடன்கள் மற்றும் மத்திய வங்கி இடமாற்ற நிதி உட்பட்ட வகையில் பீஜிங்கிற்கு இலங்கை சுமார் 6.5 பில்லியன் டொலர்களை செலுத்தவேண்டியுள்ளது.

இந்தநிலையில் தமது கடனை நிலைநிறுத்துவதை உறுதி செய்வதற்காக இலங்கை சீனாவுடன்பேசவேண்டும்என்று கோரியுள்ள சீனிவாசன், இலங்கை அதிகாரிகளுடன் தொழில்நுட்ப பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


## வீசா சேவைகள்

நேர் வழியில் குறுகிய காலத்தில் ஐரோப்பியா செல்ல அரிய வாய்ப்பு!

ஐரோப்பிய நாடான Azerbaijan இல் 6 மாத கல்வியின் பின்னர் நீங்கள் விரும்பிய நாடொன்றில் குடியேறலாம்.

**( Hungary, Poland, France, Swiss, Germany )**

- ஆகக் குறைந்த தகைமை O/L
- 7 நாட்களில் இலங்கையிலிருந்து பயணமாகலாம்
- 30 வயதிற்குட்பட்டவர்கள்

விண்ணப்ப முடிவுத் திகதி – 31.07.2022

(12260)

📞 - 070 461 4192

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



- ✔ சம்பளம் - 25000 /= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✔ வயது-32 தொடக்கம் 35
- ✔ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-4659)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✔ ONLINE APPLICATIONS
- ✔ VISA APPOINTMENTS
- ✔ PASSPORT APPLICATION
- ✔ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

(C-4659)




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்.

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777



# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகம்

யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகத்தில் இயங்கும் சிற்றுண்டிச்சாலை மற்றும் அலுவலக வாகனங்களிற்கான வாகன சுத்திகரிப்பிற்காக 15.08.2022 - 14.08.2023 வரையான காலப்பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல | விபரம் | சிற்றுண்டிச்சாலை | வாகன சுத்திகரிப்புச்சேவை |
|---|---|---|---|
| 01 | படிவக் கட்டணம் | ரூபா 1,000.00 | ரூபா 500.00 |
| 02 | கேள்வி வைப்பு (மீளளிப்பு) | ரூபா 10,000.00 | ரூபா 10,000.00 |
| 03 | படிவ விநியோகம் | 28.07.2022- 04.08.2022 திகதி வரை | 28.07.2022 - 04.08.2022 திகதி வரை |
| 04 | விண்ணப்பம் ஏற்பு | 05.08.2022 - மு.ப 10.00 வரை | 05.08.2022 - மு.ப 10.00 வரை |
| 05 | விண்ணப்பம் திறத்தல் | மு.ப 10.00 | மு.ப 10.00 |

விண்ணப்பத்தை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புக்கு (தொலைபேசி இல 021 222 2647)

**வலயக்கல்விப் பணிப்பாளர்**

**யாழ்ப்பாண வலயக்கல்வி அலுவலகம்**

(C-4667)



# காணி விற்பனைக்கு

**யாழ். நாவற்குழி சந்தியில் 69 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/= ) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

(12277)

பார்வையிடும் நேரம்

காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

076 490 5403, 076 491 2493, 076 490 6029


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.